Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தமிழகச் சிற்பக்கலை மரபும் வளர்ச்சியும்

**ச.பாப்பாசெல்வம்[1] முனைவர் பட்ட ஆய்வாளர்**
**சிற்பத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**
**செ.ராதிகா[2] கௌரவ விரிவிரையாளர்**
**வணிகவியல் துறை, சர் ஐசக் நியூட்டன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகப்பட்டினம்**



**ஆய்வு நோக்கம்:**

தமிழ்நாடு பல்வேறு கலைகளை வளர்த்தெடுப்பதில் மிக முக்கியமான பங்கினை காலந்தோறும் பின்பற்றி வருகிறது. குறிப்பாக கட்டடம், சிற்பம், ஓவியம், நாட்டியம், இசை, நாடகம் மற்றும் விழாக்கள் போன்ற பல கூறுகளை மிகச்சிறப்பான இடத்திற்கு கொண்டுவந்த பண்பாட்டுத் தொட்டிலாக தமிழ்நாடு திகழ்ந்து வருவதை நாம் அனைவரும் அறிந்ததே. இவற்றை இன்னும் பல்வேறு நுணுக்கமான மற்றும் அடிப்படை செய்திகளோடு கோயில்கலையில் சிற்பங்கள் பற்றி விரிவான தகவல்களை வளர்ந்து வரும் தலைமுறையினர் அறிந்து கொள்ளவேண்டும் என்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

**ஆய்வுச் சுருக்கம்:**

கோயில்களின் முக்கிய அம்சங்களாக இருக்கும் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை போன்ற பல்வேறு கலைகளெல்லாம் இறையுணர்வையும் கலையுணர்வையும் இணைத்த ஒரு பண்பாட்டுக் கூறுகள் இவை. கலை என்பது உரிமையுடன் கூடிய சுதந்திரத்துடன் அழகுணர்வை வெளிப்படுத்த என்றுமே முயலும். கலையற்ற மதமோ, மதமற்ற கலையோ பண்பாட்டு தளத்தில் ஓர் ஆழமான தாக்கத்தையும் எப்போதும் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தாது. ஆகையால் கோயிற்கலையில் சிற்பங்கள் சிறப்பான இடத்தை பெறுவதனால் பல்வேறு நுட்பங்களை ஆராய்ந்து இந்தக் கட்டுரையை எழுதுகிறேன்.

**திறவுச் சொற்கள்:**

கோயிற்கலை, சிற்பக்கலை, சிற்ப மரபு, சிற்ப வகைகள், சிற்ப அமைதிகள்

**முன்னுரை:**

. மண், மரம், செங்கல், கல், உலோகம், தந்தம், மெழுகு, அரக்கு முதலியவற்றை கொண்டு உருவங்களை அமைக்கும் கலையை சிற்பக்கலை என்கிறோம். இதனை,

**"வழுவறு மரனும் மண்ணும் கல்லும்**
**எழுதிய பாவையும் பேசா என்பது**
**அறிதலும் அறிதியோ? அறியாங்கொல்லோ?**

**அறியாய் ஆயின் ஆங்கு அது கேளாய்!"** என்றும்,

**"மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும்**

**கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுக்க"**[1]

என்றும் **மணிமேகலைக் காவியம்** கூறுகிறது.

சங்ககாலத்தில் ஏறத்தாழ கி.மு 300இல் தோன்றிய தொல்காப்பியம் எனும் பழம்பெரும் இலக்கண நூலில் சிற்பக்கலை பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரனுக்கு கல் நடுவது பழந்தமிழர் வழக்கம். மாண்ட வீரனது உருவம் அக்கல்லில் பொறிக்கப்படும். இங்ஙனம் வீரருக்குக் கல் நடுதல் தொல்காப்பியர் காலத்தில் திடீரென எழுந்ததன்று. அவருக்கு முன்பே தொன்றுதொட்டு வந்த பழக்கமாகும். எனவே, சிற்பக்கலை தமிழகத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோன்றிய கலை எனலாம்.[2]

உருவ வணக்கம் பழைய தமிழர்களுடைய சமய வழிபாட்டு முறைகளில் ஒன்றென்பது, இந்திய சமயங்களையும், சிற்ப வகைகளையும் ஆராய்ச்சி செய்வார் கூறும் உண்மைகளுள் ஒன்றாகும். ஆகவே உருவங்கள் அமைத்தாரெனக் கூறுவது பொறுந்தாது. தெய்வங்களுக்கு ஆலயங்கள் கட்டி வணங்குவது தமிழர்களது பழைய வழக்கங்களிலொன்று. பழந்தமிழ் நாட்டில் கோயில் களிருந்தனவென்பது,

**"பனியியர் அத்தைநின் குடையே முனிவர்**

**முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே"**[3]

என்று **புறநானூறும்**,

**"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்**

**அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்**

**வால்வளை மேனி வாலியோன் கோயிலும்**

**நீல மேனி நெடியோன் கோயிலும்**

**மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்"**[4]

என்று **சிலப்பதிகாரமும்** இந்திரவிழா எடுத்த காதையில் கோயிலைப் பற்றி குறிப்பிடப்படுகிறது.

சங்க காலத்தில் சிவன், முருகன், திருமால், பலதேவன், கொற்றவை (துர்க்கை), சூரியன், சந்திரன் முதலிய பல தெய்வங்களுக்கும் இந்திரனது வெள்ளை யானக்கும் கோயில்கள் இருந்தன என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. கோயில்களில் வழிபாட்டிற்குரிய தெய்வங்களின் உருவங்கள் சுதையாலும், மரத்தாலும், கல்லாலும் செய்யப்பெற்றிருத்தல் வேண்டும் என்று கொள்வது பொருத்தம் ஆகும். இன்றுள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் சம்பாபதி அம்மன் கோவில் சிதைந்து காணப்படுகிறது. அதில் காணப்படும் உருவங்கள் சுதையால் ஆனவை. எனவே சுதை உருவங்கள் சங்க காலத்தில் இருந்திருத்தல் பொருத்துமாகும்.

இப்போதும் கூட மரத்தினாலும் சுதையினாலும் செய்யப்பட்ட தெய்வ உருவங்கள் சில கோயில்களில் உள்ளன. உதாரணமாக உத்திரமேரூர் சுந்தரவரத பெருமாள் கோயிலிலுள்ள தெய்வ உருவங்கள் மரத்தினால் செய்யப்பட்டவையே. திருவல்லிக்கேணி

பார்த்தசாரதி பெருமாள், காஞ்சி பாண்டவ தூதுர் பெருமாள், மகாபலிபுரத்துத் தலசயனப் பெருமாள், திருவிடந்தை வராகப் பெருமாள் முதலிய கோயில்களில் உள்ள உருவங்கள் சுதையினால் ஆனவை.[5]

**சிற்ப மரபின் தொடக்கம்:**

பொன், வெள்ளி, வெண்கலம் போன்ற உலோகத்தாலோ மற்ற மரம், தந்தம், கல், களிமண் போன்ற பொருள்களாலோ கண்ணாற் கண்ட உருவங்களையோ கற்பனை உருவங்களையோ அமைக்கும் கலையானது சிற்பம் எனப்படும். கருத்தை அல்லது உணர்ச்சியை இசையில் ஒலி தெரிவிக்கிறது. சிற்பத்தில் வடிவம் அதை செய்கிறது. சிற்பம் என்னும் சொல் கட்டடச் சிற்பம், உருவச் சிற்பம் முதலிய கலைகளுக்கும் பொதுவாக வழங்குவதுண்டு.

சிற்ப வடிவக்கலை, வடிவத்தை அமைக்கும் முறையை ஒட்டிச் சிற்பத்தைப் பலவகையாகப் பிரிக்கலாம். வடிவம் முழுவதையும் தனியாக காட்டும் சிற்பம் ஒருவகை. படிமங்கள் இவ்வகையைச் சேர்ந்தவை. இவ்வகைச் சிற்பத்தில் வடிவம் பின்னணியுடன் விலகி வேறாக நிற்கும். வடிவத்தின் ஒரு பக்க தோற்றத்தை மட்டும் காட்டும் சிற்பம் புடைப்புச் சிற்பம் எனப்படும். இவ்வகைச் சிற்பத்தில் வடிவம் பின்னணியுடன் சேர்ந்திருக்கும். புடைப்புச் சிற்பத்திலும் வடிவங்கள் மிகவும் உயரமாக இருக்கலாம், தாழ்ந்தும் இருக்கலாம். முன்னது உயர்புடைப்புச் சிற்பம் எனப்படும். பின்னது தாழ்ப்புடைப்புச் சிற்பம் எனப்படும். புடைப்புச் சிற்பத்தில் வடிவம் மேற்பரப்பினும் உயரமாகப் பிதுங்கி நிற்கின்றது. மேற்பரப்பை குடைந்த வடிவம் அதனினும் தாழ்ந்து இருக்கும்படியாகவும் சிற்பம் அமைப்பதுண்டு. இவ்வகை சிற்பம் குடைவுச் சிற்பம் எனப்படும். இது புடைப்புச் சிற்பத்திற்கு நேர்மாறானது. மணிகள், இலச்சினைகள், நாணய அச்சுகள் போன்றவை குடைவு சிற்பங்களாக அமைக்கப்படுகின்றன.

சிற்பத்தின் பயனையொட்டியும் சிற்பத்தை பாகுபடுத்தலாம். கட்டடத்தை அழகு செய்ய அதன் பகுதியாக அமைக்கப்படுவது அலங்காரச் சிற்பம். கோயில்களிலும் அரண்மனைகளிலுமுள்ள உள்ள தூண்களிலும் சுவர்களிலும் அமைக்கப்படும் புடைப்புச் சிற்பங்கள் இவ்வகையைச் சேர்ந்தவையே. கட்டடம் போன்ற வேறொரு அமைப்பை சாராமல் தனித்து நிற்கக்கூடிய, தனித்து நோக்கக்கூடிய சிற்பம் தனிச்சிற்பம் எனப்படும். ஒருவரின் அல்லது ஒரு நிகழ்ச்சியின் நினைவாக அமைக்கப்படும் சிற்பம் நினைவுச் சிற்பம் எனப்படும். மன்னர்கள், வீரர்கள், புலவர், கலைஞர் போன்றவர்களின் நினைவாக நாட்டப்படும் சிலைகள், வெற்றித் தூண்கள் போன்றவை நினைவுச்சின்ன சிற்பங்கள் ஆகும். ஒரு குறிப்பிட்டவரின் உருவத்தை உள்ளது உள்ளவாறு இயற்கையாகக் காட்டும் நினைவுச்சின்னச் சிற்பம் உருவச் சிற்பம் எனப்படும்.[6]

சிற்பத்துக்கு பலவகை மூலப் பொருட்கள் கையாளப்படுகின்றன. களிமண் ஆதி கால முதல் சிற்ப வேலைக்கு பயன்பட்டு வருகிறது. இதனால் வடிவங்கள் செய்வது எளிது. செய்த வடிவத்தை சுட்டு விட்டால் அது உறுதி பெற்றுவிடுகிறது. சுட்ட மண் சிற்பம் தேயாது, துரு ஏறாது, வண்ணம் தீட்டுவதற்கு ஏற்றது. வெண்கலமும் அருங்கலை சிற்ப வேலைகளுக்கு பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பயன்பட்டு வருகிறது. பொன், வெள்ளி, செம்பு முதலிய பிற உலோகங்களும் சிற்ப வேலைப்பாடுகளுக்குப் பயன்படுகின்றன. சிற்ப வேலைக்கு மிகுதியாக

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பயன்படுகிற பளிங்கும், மரமும், தந்தமும் சிற்ப வேலைக்கேற்ற பிற பொருள்கள் ஆகும். இவை செதுக்குவதற்கு எளியவை. மரத்தினும் தந்த நுட்ப வேலைபாடுகளுக்கு மிகவும் ஏற்றது. சிற்பக் காலத்தையொட்டி வளரும் அருங்கலை காலத்திற்கு காலம் இடத்திற்கு இடம் அதன் முறைகளும் நோக்கங்களும் மாறுபடுகின்றன. மாறுபாட்டிற்கேற்பச் சிற்பக்கலையின் பல மரபுகள் ஏற்பட்டுள்ளன. அவை பல்வேறு அரச மரபின் வழியாக பல மாறுதல்களையும் வடிவங்களையும் பெற்று திகழ்ந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.

**சிற்பங்களின் வகைகள்:**

கோயில்களில் இடம்பெறும் சிற்பங்களை அவை அமைந்துள்ள இடங்களை பொறுத்து வகைப்படுத்தலாம். உதாரணமாக விமானச் சிற்பங்கள்,. கண்டச் சிற்பங்கள், கோபுரச் சிற்பங்கள், மண்டபச் சிற்பங்கள், தேர்ச் சிற்பங்கள் என வகைப்படுத்தி மேலும் புராண இதிகாசங்களின் அடிப்படையில் அமைந்த சிற்பங்கள், நாட்டார் வழக்காற்றியல் சிற்பங்கள் அல்லது இறையுரு அல்லாத சிற்பங்கள், அரச-அரசி உருவங்கள், நடனச் சிற்பங்கள், பாலியல் சிற்பங்கள், கருவறை இறையுருவங்கள் என கருத்தமைதியின் அடிப்படையிலும் வகைப்படுத்தலாம்.[7] பல்லவர், சோழர் ,பாண்டியர், விஜயநகர என அரச மரபினர் சிற்பங்களிடையே காணப்படும் கருத்தமைதிகளுக்கான காரணங்களை அக்கால சமூக பொருளாதார பின்புலங்கள் கொண்டு பார்க்கலாம். சிற்பங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1. **விமானச் சிற்பங்கள்**
2. **கோபுரச் சிற்பங்கள்**
3. **கருவறைச் சிற்பங்கள்**
4. **மண்டபச் சிற்பங்கள்**
5. **புராண, இதிகாசச் சிற்பங்கள்**
6. **நாட்டார் வழக்காற்றியல் சிற்பங்கள்**
7. **அரச, அரசி உருவங்கள்**
8. **நடனச் சிற்பங்கள்**
9. **பாலியல் சிற்பங்கள்**
10. **செப்புத் திருமேனிகள்**
11. **தேர்ச் சிற்பங்கள்**
12. **கண்டச் சிற்பங்கள்**
13. **சமயப்பூசல் சிற்பங்கள்**

**சிற்பங்களின் அமைதிகள்:**

சிற்ப அமைதி என்பது சிற்பம் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பது பற்றிய செய்திகளைக் கூறுவதாகும். உதாரணமாக ஒரு இறைவனது சிற்பத்தை எடுத்துக்கொண்டோமெனில்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

அதில் இடம்பெற வேண்டிய நெளிவுகள்(பங்கம்) அவ்விறைவனுக்கே உரிய கோலம், ஆடை, அணிகலன்கள், ஆயுதங்கள் இடம்பெற வேண்டிய கரங்கள் அவற்றின் நிலை(ஹஸ்தம்), கைவிரல்களின் அமைப்பு(முத்திரை), கால்களின் நிலை(ஆசனம்), வாகனம் ஆகிவற்றைப் பற்றி சிற்ப சாஸ்திரம் கூறும் செய்திகளே சிற்ப அமைதி எனப்படும்.

உதாரணமாக செப்பு திருமேனிகளில், திருஞானசம்பந்தரது திருமேனியும், வெண்ணெய்க்கு ஆடும் கண்ணனது திருமேனியும் ஒரே மாதிரியாகவே அமைந்திருக்கும். இவ்விருவரையும் வேறுபடுத்திக் காட்ட புராண அடிப்படையில் திருஞானசம்பந்தரது கைவிரல் மேல்நோக்கியும் கண்ணனது கைவிரல் கீழ்நோக்கியும் அமைக்கப்பட்டிருக்கும். திருஞானசம்பந்தர் சிற்பம் ஞானப்பால் கொடுத்த அம்மையப்பனைக் காட்டும் விதமாக ஆள்காட்டி விரலால் சுட்டுவது போன்று அமையும். கண்ணன் சிற்பம் காலிங்க நர்த்தனத்தில் பாம்பின் வாலைக் கையில் பிடித்திருப்பது போல கைவிரல் கீழ்நோக்கி இருக்கும். எனவே இதுபோன்ற சிற்பக்கலை ஆய்வில் சிற்பவமைதி பற்றிய செய்திகளை அறிந்து கொள்வது மிக இன்றியமைதாகிறது.[8]

சிற்ப சிற்ப அமைதிகளின் கூறுகள்:

1. **ஆசனங்கள்**
2. **அணிகலன்கள்**
3. **ஆயுதங்கள்**
4. **கைகளது நிலை**
5. **வாகனங்கள்**

**சிற்பங்களின் மெய்ப்பாடுகள்:**

வடமொழியில் நவரசம் என்றும் தமிழ் இலக்கணத்தில் எண்வகை மெய்ப்பாடு என்றும் அழைக்கப்படும் கோட்பாடுகளுக்கும், சிற்பக்கலைக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. ஒரு சில சிற்பங்களைத் தவிர பெரும்பாலான சிற்பங்கள் ஏதேனும் ஒரு மெய்ப்பாட்டை வெளிப்படுத்துவதாக படைக்கப்பட்டிருக்கும். அவ்வாறு மெய்ப்பாட்டுடன் கூடிய சிற்பங்களே அழகு உணர்ச்சியுடன் மிளிர்கின்றன. தொல்காப்பியம் மெய்ப்பாட்டை எட்டு எனக்கூறும். அவை

**"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**
**அப் பால் எட்டே மெய்ப்பாடு என்ப"**[9]

அதன்படி சிரிப்பு, அழுகை, துன்பம், மயக்கம், அச்சம், பெருமிதம், சினம், மகிழ்ச்சி என மெய்ப்பாடுகள் எட்டாகும்.

உதாரணமாக மெய்ப்பாடுகளில் ஒன்றான அழுகை என்பது இழிவு, இழவு, அசைவு, வறுமை ஆகிய நான்கனிடத்துத் தோன்றும் என்பர். அழுகை எனும் மெய்ப்பாடும் தன்மாட்டும் பிறர்மாட்டும் பிறக்கும் எனக் கூறுவர். கோயிற் சிற்பங்களில் அழுகை தொடர்பான சிற்பங்கள் அரிதாகவே இடம்பெறும். ஏனெனில் சிற்பங்கள் மக்களை மகிழ்விப்பதற்காக அமைக்கப்படுவதால் அழுகை தொடர்பான சிற்பங்களை அமைப்பதில்லை. இராமாயணம் போன்ற

முழுமையான கதை பல சிற்பத் தொகுதிகளாக இடம்பெறும்போது அத்தகு சிற்பம் இடம்பெறும். இவ்வழுகைக்கு அழகர்கோயிலில் இடம் பெற்றுள்ள இராமாயண ஓவியத்தில் தசரதன் இறக்க தேவியர் மூவரும் கைகளை உயரத்தூக்கிப்படி அழுகின்ற காட்சியைக் கூறலாம். மேலும் தஞ்சை பிரகதீசுவரர் கோயிலில் இடம் பெற்றுள்ள திரிபுராந்தகர் ஓவியத்
தொகுதியில் போர்க் காட்சியைப் பார்க்கும் அசுரர்களின் மனைவியரது முகங்கள் சோகமாகவும், கண்களில் நீர் வடிவதாகவும் காட்டப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.[10] அவ்வாறு பல்வேறு காலகட்டங்களில் தமிழ்நாட்டில் தோன்றிய பல்லவர், சோழர், பாண்டியர், விஜயநகர கால அரச மரபுகளிடையே காணப்பட்ட சில சிற்பக் கலைப்பாணியினைக் காண்போம்.

**பல்லவர் காலச் சிற்பங்கள்:**

பல்லவரது கலைப்பாணியில் அமைந்த சிற்பங்கள், மெலிந்த நீண்ட உடலமைப்பும், பரந்த மார்பும், குறுகிய இடையும் கொண்டு விளங்கும். இச்சிற்பங்களின் மகுடங்களானது கூம்பு வடிவமாகவும், நீண்டும் இருக்கும். யக்ஞோபவிதம் எனப்படும் பூணூல் வலதுகையின்மேல் செல்வதாக அமையும். அணிகலன்கள் குறைவாகவே இடம்பெறும். தலையலங்காரம் ஆபரண அலங்காரமின்றி எளிமையாக இருக்கும்.[11]

பெண்களது சிற்பங்கள் இளமையுடன் காட்டப்படும். மார்பகங்கள் சிறிதாகவும் இடை சுருங்கியும், அடிவயிற்றுப்பகுதி முன்பக்கம் சற்றுப்பருத்தும் காணப்படும். பல்லவரது சிற்பங்களில் ஆடை இடுப்பின் இருமருங்கிலும் பரந்து விரிந்து காணப்படும். சிற்பங்களில் உள்ள காதணிகள், குறிப்பாகக் குண்டலங்கள் தடித்தவையாகவும் கேயூரங்கள் வேலைப்பாடற்றவையாகவும் இருக்கும்.[12] பெண் சிற்பங்களில் குறிப்பாக இறைவியரது சிற்பங்கள் மார்புக்கச்சையுடன் செதுக்கப்படும் மரபு பல்லவர் காலத்திலேயே இருந்துள்ளது. இத்தகு வழக்கம் இறைவியரில் ஒருவரை மற்றவரிடத்தினின்று வேறுபடுத்தவும் உயர்த்திக்காட்டவும் வந்ததாக கொள்ளலாம். பல்லவரது சிற்பங்களில் புடைப்பு சிற்பங்களே அதிகம். அதுபோலவே அரச, அரசியரது உருவங்களை செதுக்கும் வழக்கமும் இவர்களது காலத்திலேயே துவங்கிவிட்டது எனலாம்.

தமிழ் திராவிட கோயில் கட்டடக்கலை மரபிற்கு மகாபலிபுரத்திலுள்ள ஒற்றைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள பஞ்சபாண்டவர் இரதங்கள் என்று அழைக்கப்படும் திரௌபதி இரதம், தர்மராஜா இரதம், பீமரதம், அர்ச்சுன இரதம், நகுல சகாதேவ இரதம் ஆகியன சிறந்த எடுத்துக்காட்டுகளாக திகழ்கின்றன. இரதங்களில் குறிப்பாக அர்ச்சுன, பீம, தர்மராஜா இரதங்களின் வெளிப்பக்கச் சுவர்கள் மாடக்குழிகளாலும் பூவணி வேலைப்பாடுகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன. மாடக்குழிகள் ஆண், பெண் தெய்வங்கள், அரசர்கள் ஆகியோரின் சிற்பங்களையும் புராணக் காட்சிகளைச் சித்தரிக்கும் சிற்பங்களையும் கொண்டுள்ளன. மிகப் பெரும் கருங்கல் பாறையின் மீது புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ள அர்ச்சுனன் தவமிருக்கும் காட்சி பிரமாண்டமான கலைப் படைப்பாகும். இக்கருங்கல் பாறை ஏறத்தாழ 100 அடி நீளமும் 45 அடி உயரமும் கொண்டதாகும்.[13]

**சோழர் காலச் சிற்பங்கள்:**

சோழரது சிற்பங்கள் அழகும் உயிரோட்டமும் கொண்டவை. பல்லவரது சிற்பங்களின் வளர்ச்சியுற்ற நிலையே முற்காலச் சோழ சிற்பங்கள் எனலாம். சோழரது சிற்பங்கள் உயரமான மகுடம், மெல்லிய, நெடிய உடலமைப்பு, பட்டையான பூணூல் எனப் பல்லவரது சிற்ப அமைதியே, சோழரது துவக்க காலத்தில் பின்பற்றப்பட்டு பின்னர் மாற்றம் அடைந்தது. பல புரிகளை கொண்ட பூணூல் தெளிவாக காட்டப்பட்டுள்ள சிம்மமுக அரைக்கச்சை, கண்டமாலை என்பவை முற்கால சோழர் சிற்பங்களில் காணப்படும் சிறப்புக்கூறுகளாகும்.

பிற்கால சோழர்கள் சிற்பங்களில் அணிகலன்களும், அலங்காரங்களும் சற்று அதிகமாக இடம்பெறும். சிற்பங்களின் முகங்கள் வட்டமானதாகவும் உடலமைப்பானது சற்று தடித்தும், குறுகியதாகவும் விளங்கும். அரைக்கச்சையில் தெளிவான சிம்மமுக அமைப்பும், ஆடைகளில் வரிகள் அல்லது பூவேலைப்பாடுகளும், பல புரிகளையுடைய பூணூலும், அலங்காரமான கேயூரமும் கழுத்தணிகளும் காணப்படும். மேலும் உருவ அமைதிகளின் தலைக்குப்பின் வைக்கப்படும் சிரச்சக்கரத்தில் தாமரை இதழ்கள் வட்டமான பகுதியினுள் அடங்கி காணப்படும்.[14] பிற்காலச் சோழர் காலத்தின் இறுதியில் சிற்பங்களில் காணப்பட்ட இத்தகு மகுடமும், வலது கையின் மேல் பூணூல் படர்ந்து
செல்லும் பாணியும் மறைந்தன. முற்கால சோழர் கோயில்களில் கருவறையின் தேவகோட்டத்தில் பிரதான இறையுருவமும் அதனோடு தொடர்புடைய வேறு சிற்பங்களும் தேவகோட்டத்தின் இரு பக்கங்களின் இடம்பெற்றிருக்கும்.

**பாண்டியர் காலச் சிற்பங்கள்:**

பாண்டியரது சிற்பக் கலைப் பாணியை முற்காலப் பாண்டியர் (சுமார் கி.பி 600 லிருந்து 850 வரை) கலைப்பாணி, பிற்கால பாண்டியர் (சுமார் கி.பி 1200 முதல் 1350 வரை) கலைப்பாணி என இருவகைப்படுத்தலாம். முற்கால பாண்டியரது கலைப்பாணியில் அமைந்த சிற்பங்கள்
சிறு அளவினுடையதாக(குறுகியதாக) இருக்கும். தலையில் இடம்பெறும் மகுடமானது சிறியதாக (கரண்ட மகுடமாக) இடம்பெறும். ஆபரணங்கள் குறைவாகவே காணப்படும் முற்கால பாண்டியரது கோயில்கள் பெருமளவு சிதைந்துவிட்டபடியால் ஒரு சில கோயில்களே சிதைவடையாது நமக்கு கிடைக்கின்றன. எனவே முற்கால பாண்டியரது சிற்பங்கள் பெருமளவு உதிரியாகவே ஆங்காங்கே கிடைக்கின்றன. அதே சமயத்தில் கழுகுமலை வெட்டுவான் கோயிலில் இடம் பெற்றுள்ள முற்காலப் பாண்டியர் காலச் சிற்பங்கள் மிக அழகு வாய்ந்தனவாக செதுக்கப்பட்டு, இன்றளவும் அழியாது கிடைத்துள்ளன.

பிற்காலப் பாண்டியரது சிற்பக்கலைப்பாணியானது முற்காலப் பாண்டியர் கலைப்பாணியிலிருந்து மாறுபட்ட அதே சமயத்தில் வளர்ச்சியடைந்தவையாகக் காணப்படும். பாண்டியர் தம் கோயில்களின் கோட்டங்களில் சிற்பங்களை வைக்கவில்லை. பதிலாக விமானத்தின் மேல் தளங்களிலும், கோபுரங்களிலும் சிற்பங்களை அமைத்தனர். அழகிய நோக்கில் பாண்டியரது

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

சிற்பங்களை பல்லவர், சோழர் தம் சிற்பங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம் எனில் இவை சற்று அழகு குறைந்தவையாகும்.[15]

**விஜயநகர காலச் சிற்பங்கள்:**

விஜயநகர காலச் சிற்பங்கள் அளவான உயரத்துடன் அமையும். அவை அதிகமான ஆபரணங்களும், விசிறி மடிப்பினைக் கொண்ட ஆடை அமைப்புடனும் விளங்கும். நாயக்கர் காலச் சிற்பக்கலை அமைப்பானது விஜயநகரரது கலைப்பாணியாகும். இவர்களது காலத்தில் அமைக்கப்பட்ட சிற்பங்கள் மிக உயரத்துடன் காணப்படும். கைவிரல்கள் மற்றும் கால் விரல்களில் நகங்கள் கூர்மையாக காட்டப்பட்டிருக்கும். உடலமைப்பு சதைப்பற்றுடன் காணப்படும். இவர்களது கலைப் படைப்புகளில் அக்கால வட்டாரப் பழக்க வழக்கங்களின் தாக்கம் அதிக அளவில் இடம் பெற்றிருக்கும்.

சிற்பக்கலை ஆய்வில் சிற்பங்கள் குறிப்பிட்ட அரச பரம்பரையினரின் கலைப்பாணியைச் சேர்ந்தவை எனக் கண்டுபிடிக்க மேற்கண்ட கலைப்பாணிகளை அறிந்து கொள்வது அவசியமாகும். கோயில்கள் பெரும்பாலும் ஒரு அரசனது காலத்தில் கட்டப்பட்டதாக இல்லாது பல அரச பரம்பையினரின் காலத்தில் கட்டப்பட்டும், விரிவாக்கப்பட்டும் வந்துள்ளமையால் அதில் இடம்பெறும் சிற்பங்களும் பல்வேறு கலைப்பாணியைச் சேர்ந்தவையாக இருக்கக்கூடும். மேற்கண்ட கலைப்பாணி தொடர்பான செய்திகளை அறிவதன் மூலம் சிற்பங்களை அடையாளம் காண்பது எளிதாகின்றது.[16]

விஜயநகர காலத் தமிழ்நாட்டில் கோயில்களின் மையப் பகுதிகளிலும் அவற்றை ஒட்டி அமைந்திருக்கும் பத்திகளிலும் இடம்பெற்றிருந்த தெய்வங்களின் உருவச் சிலைகள் ஏனைய பகுதிகளிலும் இடம்பெறத் துவங்கின. இக்காலப் பகுதியைச் சேர்ந்த தூண்கள் முந்தைய காலப்பகுதியைச் சேர்ந்தவைகளை காட்டிலும் அதிகம் அலங்கரிக்கப்பட்டவைகளாக உள்ளன. ஒற்றைக்கல்லில் மிகப்பெரிய யாளி, குதிரை வடிவச்சிலைகள் உருவாக்கப்பட்டன. அவற்றில் புராண இதிகாசக் காட்சிகள், அரச குடும்ப உறுப்பினர்களின் இயற்கை வடிவ அளவிலான முழுமையான உருவங்கள், சாதாரண மனிதர்களின் வடிவங்கள், விலங்குகள், பூவேலைப்பாடுகள் ஆகியவை செதுக்கப்பட்டன. இக்காலப் பகுதியின் மற்றொரு சிறப்பம்சம் இசைத்தூண்களாகும். மண்டபங்களிலுள்ள தூண்களின் மேற்பகுதி சிங்கம் அமர்ந்திருப்பது போல அமைக்கப்பட்டிருப்பது ஒரு பொதுவான கூறாகும். கர்ப்பக்கிரகத்தின் சுவர்களிலும் மண்டபங்களிலும் கற்சாளரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.[17]

**முடிவுரை:**

தமிழ்நாடு மிகப்பெரிய பாரம்பரிய மிக்க கலைகளைக் கொண்டு விளங்கிக் கொண்டிருப்பதால் வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் வருடத்திற்கு வருடம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது எனலாம். இன்னும் நம்முடைய சிற்பக்கலைகள் யாவும் அவர்களை வியப்பில் ஆழ்த்துகிறது. இதனை மேலும்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

செம்மைப்படுத்த தமிழக அரசின் சுற்றுலாத்துறை, தமிழ்வளர்ச்சித்துறை, இந்து அறநிலையத்துறை ஆகிய துறைகள் ஒன்றிணைந்து முக்கியக் கோயில்களின் சிற்பக்கலையையும், அறிவியல் பாரம்பரியமிக்க கோயிற் கட்டடக் கலைச் செல்வங்களையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதே நமது மகத்தான பணியாகும்.

**புகைப்படங்கள்:**




**சுதைச் சிற்பங்கள்**
**<u>மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்</u>**



**ஆண்டாள் மரச்சிற்பம்**
**மைய அருங்காட்சியகம், சென்னை .**




**மதுரை புதுமண்டபத்தில் உள்ள**
**<u>திருமலை நாயக்கர்</u> சிலை**



**கங்கைக்கொண்ட சோழபுரம் கோயிற் சிற்பம்**

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513






மாமல்லபுரம் புடைப்புச் சிற்பங்கள்

விஜயநகர காலத்திய யாளி, குதிரைச் சிற்பங்கள்

மாமல்லபுரம் புடைப்புச் சிற்பங்கள்



ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)



கழுகுமலை சமணர் படுகைகள், பாண்டிய பேரரசர் பரந்தக நெடுஞ்சடையன் காலம்

**துணைநூற் குறிப்புகள்:**

1. செம்மொழித்தமிழ், ம.வே. பசுபதி, பக் 1425
2. தமிழகக் கலைகள், மா. இராசமாணிக்கனார், பக் 29
3. செம்மொழித்தமிழ், ம.வே. பசுபதி, பக் 816
4. மேலது நூல், பக் 1258
5. தமிழ் வளர்த்த அழகுக் கலைகள், மயிலை சீனி. வேங்கடசாமி, பக் 52
6. தமிழர் சிற்பக்கலை, சிற்பி கோ. வீரபாண்டியன். பக் 74
7. கோயில் ஆய்வும் நெறிமுறைகளும், அம்பை மணிவண்ணன், பக் 166
8. மேலது நூல், பக் 133
9. செம்மொழித்தமிழ், ம.வே. பசுபதி, பக் 81
10. Facts of Indian Art and Culture, G. Sethuraman, p 58
11. தமிழ்நாட்டு சமுதாயப் பண்பாட்டுக் கலை வரலாறு, கு. சேதுராமன், பக் 211
12. தமிழகச் சிற்ப, ஓவியக் கலைகள், ஏ. ஏகாம்பரநாதன், பக் 27
13. தமிழ்நாடு அரசு, பள்ளிக் கல்வித்துறை, ஏழாம் வகுப்பு - சமூக அறிவியல் பாடநூல் (மூன்றாம் பருவம்), பக் 142
14. மேலது நூல், பக் 58
15. கோயில் ஆய்வும் நெறிமுறைகளும், அம்பை மணிவண்ணன், பக் 128
16. மேலது நூல், பக் 129
17. தமிழ்நாடு அரசு, பள்ளிக் கல்வித்துறை, ஏழாம் வகுப்பு - சமூக அறிவியல் பாடநூல் (மூன்றாம் பருவம்), பக் 148

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~